## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்க தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்படவேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சபையின் நிதிக்கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. அபிப்பிராயம் மறுதலிப்பதற்கான அடிப்படை பகுதிகளில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் பொருட்டு போதியளவிலும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளையும் பெற்றுக்கொள்வறத்கு எனக்கு இயலவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக நடாத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் சபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிருதல் எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கு போதுமான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்களின் தன்மை மற்றும் செயற்படு தன்மையின் அடிப்படையில் அவற்றின் ஆக்கபூர்வமான பயன்படு ஆயுட் காலத்தினை கணிப்பீட்டு பெருமானத் தேய்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட பயன்படு ஆயுட் காலத்துடனான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணணி உபபாகங்கள் ஒரு சொத்து தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 15,514,734 ஆன பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | தெங்கு பயிர்ச் செய்கை சபையின் இலாபமீட்டாத மக்களுக்கு சேவை வழங்கும் பகுதியளவு அரச நிறுவனம் என்பதால் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் அலுவவக உபகரணங்கள் கனணி உதிரிப்பாகங்கள் மற்றும் இலத்திரணியல் உபகரணம் 10 வருடம் கணிப்பிடுதல் காலத்திற்கு உகந்தது என கருதப்பட வேண்டும். | நியமத்தின் பிரகாரம் ஒன்றுக்கொண்று வேறுபட்ட பயன்படு ஆயுட்காலம் கொண்ட சொத்துக்கள் குறித்த சொத்து தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டு பயன்படு ஆயுட் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு பெறுமானத்தேய்வு விகிதங்களின் கீழ் தேய்விடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும். |
| (ஆ) | கடந்த வருடங்களில் நிர்மாணங்கள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் ரூபா 13,526,044 கிரயமான கட்டிடங்கள் மற்றும் ரூபா 7,692,368 கிரயமான சூரிய சக்தி தகடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் மூலதனமாக்கப்படாது நடைமுறை வேலை கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் ஆதனங்கள், | மாத்தளை பிரதேச அலுவலக புதிய கட்டிடத்தின் தலைமை அலுவலகத்தின் முதலாம் கட்டத்தினை நிர்மாணிப்பதற்கு மற்றும் தலைமை அலுவலகத்தை நிறுவி சூரியவலு கட்டமைப்பிற்குரிய பணிகளின் நிறைவு அறிக்கை நிதி முகாமைத்துவ பிரிவிற்கு | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் கட்டிடங்கள் மற்றும் சூரியவலு தகடு உரிய நியமத்தின் பிரகாரம் மூலதனமாக்கப்பட்டு உரிய பெறுமானத் தேய்வு விகிதத்தின் கீழ் தேய்விடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்த அளவினால் குறைவாகவும் நியமத்தின் 69 பந்தியின் பிரகாரம் இந்த சொத்துக்களுக்குரிய ரூபா 1,445,539 ஆன பெறுமானத் தேய்வு சீராக்கம் மேற்கொள்ளாத காரணத்தால் ஆண்டின் செயற்பாட்டு மிகை அந்த அளவினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கிடைக்காமையால் எதிர்வரும் வருடங்களில் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | |
| (இ) | முழுமையாக தேய்விடப்பட்டிருந்த ரூபா 348,563,841 கிரயமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்ட போதிலும் அந்த சொத்துக்களுக்குரிய பயன்படு ஆயுட் காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராதுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7(92)(ஆ) பந்தியின் பிரகாரம் இந்த சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் ஆயுட் காலத்தை மீள மதிப்பிடுவதற்காக மேற்கொள்ள நேரிடும் செலவினத்தை தீர்ப்பதற்கு எதிர்வரும் வருடத்தில் மதிப்பீடுகளை தயாரித்து திறைசேரியின் நிதி ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் சொத்துக்களின் பயன்படு ஆயுட் காலத்தை மீள மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. | முழுமையாக தேய்விடப்பட்டுள்ள சொத்துக்கள் நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீளவும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியதுடன் நியம இலக்கம் 07 (92)(ஆ) பந்தியின் பிரகாரம் இந்த சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு முரணாக காசுப்பாய்ச்சல் கூற்று தாயரிக்கப்பட்டிருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் 39,445,822 இனால் கூடுதலாகவும், முதலீட்டு நடவடிக்கையில் இருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 50,257,406 இனால் குறைவாகவும் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 26,742,408 இனால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தமையால் காசுப்பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மையினை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளமுடியாது இருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏற்பட்டுள்ள பதிவு செய்தலிலான வழுக்களை திருத்தி திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றினை கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அரசில் இருந்து கிடைக்கும் மாணியங்களை கணக்கு வைத்தலுடன் தொடர்புடையதாக சபையினால் கணக்கீட்டு கொள்கையொன்று இணங்காணப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்த ரூபா 1,036,995,186 ஆன அரச மானியங்கள் இரு முறைகளில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதனம் மற்றும் வருமான செலவீட்டு ஒதுக்கங்கள் தனித்தனியாக இணங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிலிருந்து கிடைத்திருந்த மானியங்களில் முதலீட்டு தன்மை வாய்ந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 13,161,198 தொகையான பணமும் உள்ளடங்கலாக மொத்த மானியமும் மீளாய்வாண்டின் போது வருமான செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச நிதியேற்பாடாக திறைசேரியிலிருந்து கிடைக்கும் மூலதன செலவினங்கள் குறித்த வருடத்தின் மூலதனச் செலவினங்களாக பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் ஏனைய செயற்திட்டங்கலிருந்து வழங்கப்படும் கொள்வனவிற்காக நியமத்தின் இலக்கம் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டால் சபைக்கு கிடைக்கும் அரச நிதியில் குறைவொன்று ஏற்படும். அதன் காரணமாக அமைச்சிலிருந்து அல்லது வேறு வெளிவாரி தரப்பினரின் செயற்திட்டங்களுக்காக வழங்கப்படும் பணம் அரச நிதியாக கருதப்படாமையால் நியமத்தின் இலக்கம் 11 இன் பிரகாரம் பதிவு செய்யப்படவில்லை. | அரச மானியங்களை கணக்கு வைப்பதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆரம்ப இருப்பு உருப்படிகளின் பெறுமதி ரூபா 1,209,600 இனால் குவைாக சீராக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை அந்த அளவினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, கடந்த வருடத்தில் அட்டுறு அடிப்படையில் மிகை ஒதுக்கீடு மீளாய்வாண்டின் இலாபதிற்கு சீராக்கப்படாது கடந்த வருடத்தின் சீராக்கம் ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டின் மிகை ரூபா 1,137,131 இனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | இருப்பு மதிப்பீட்டின் பிரகாரம் 2018-21-31 ஆம் திகதியில் உள்ளபடியாக தென்னங்கன்று நாற்று மேடை பேரேட்டுக்குரிய வெற்று பொலி பாக் இருப்பின் பெறுமதி ரூபா 1,209,600 இனால் குறைவாக காணப்பிக்கப்பட்டிருந்தமையால் நாற்று மேடை இலாபம் குறைத்துக் காண்பிக்கப்பட்டமையின் வலு 2020 நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான இருப்பின் பெறுமதி ஆரம்ப இருப்பிற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டியதுடன் அட்டுறு செலவினங்கள் மிகை ஒதுக்கீடு மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் ரூபா 3,493,125 பெறுமதி ஆன பொலி பைகளை கொள்வனவு செய்தல் இரு தடவை காசுப் புத்தகம் மற்றும் பொலி பாக் கொள்வனவு கணக்கில் பதிவு செய்யப்பட்ட தவறினை திருத்தும் போது தவறுதலாக நாற்று மேடைகளுக்கு பதிலாக தலைமை அலுவலகத்தில் பேணப்படும் நடைமுறை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் நாற்று மேடைகளுக்காக தலைமை அலுவலகத்தில் பேணப்படும் நடைமுறைக் கணக்கின் மீதி அந்த அளவினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த வலு 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | நாற்று மேடைக்காக தலைமை அலுவலகத்தில் பேணப்படும் நடைமுறைக் கணக்கு திருத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் கட்டிட பழுதுபார்த்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,577,450 ஆன செலவினம் கட்டிடங்கள் கணக்கில் மூலதனமாக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான கட்டிட கிரயம் மற்றும் செயற்பாட்டு மிகை அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கட்டிட பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 1,933,450 கட்டிட கணக்கிற்கும் மேழும் ரூபா 643,999 தொகையான பழுதுபார்த்தல் பணிகள் தன்னிச்சையான நிதி ஒதுக்கீட்டின் கீழ் உள்ள மூலதன கட்டிட பழுதுபார்த்தல்கள் மற்றும் அபிவிருத்தியின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | மூலதனமாக்கப்பட்ட கட்டிட பழுதுபார்த்தல்கள் திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் வெலிகம இலை காய்தல் நோயினை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 15,270,514 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 12,285,900 ஆன பெறுமதி அமைச்சிடமிருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளளிப்பு செய்யப்படாத ரூபா 2,984,614 பெறுமதி பெற வேண்டிய வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை. | தாமதமாகி கிடைத்துள்ள காசோலைகளில் வழியிலுள்ள பணமாக பதிவு செய்வதன் பதிவு செய்தல், விடுபட்டுள்ளதுடன் அவை 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுககளினுல் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | அட்டுறு அடிப்படையில் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினங்கள் இணங்காணப்பட வேண்டும். |
| (உ) | கப்புறுஹ கடன் பிணை மேவுகை நிதியத்திற்காக சபையின் பங்களிப்பு ரூபா 2,789,450 ஆன பேரிலும் பிணை மேவுகை பங்களிப்பு நிதியத்தின் அது ரூபா 1,156,300 ஆக பதிவு செய்யப்பட்டமையால் ரூபா 1,633,150 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடங்களில் திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | கம்புறுஹ கடன் பிணை மேவுகை நிதியத்தின் சரியான பெறுமதி கணக்குகளினுல் இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்படாத ரூபா 1,140,000 பெறுமதியான சிவப்பு வண்டு அரித்தல் பிரச்சினையை இணங்காணும் 120 உபகரணங்கள் சொத்துக்கள் மற்றும் கடன் கொடுத்தோராக இனங்காணப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் மற்றும் கடன் கொடுத்தோரின் அளவானது அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டது. | 2019-12-31 ஆம் திகதி இடம் பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2020-02-10 ஆம் திகதி இந்த உபகரணம் சபைக்கு கிடைத்துள்ளது. | கட்டளையிடப்பட்ட பொருட்கள் சபைக்கு கிடைத்த பின்னர் அதன் பெறுமதியை கணக்குகளில் இனங்காண வேண்டும். |
| (உ) | சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் இது வரையில் கிடைத்திராத தொழில்சார் கமரா ஒன்று மற்றும் றோன் கமராவிற்கு கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 290,110 ஆன தவறான பெறுமானத் தேய்வு ஒதுக்கம் பிற்கால சீராக்கல் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வட்டி வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செயற்பாட்டு மிகை அந்த அளவினால் அதிகரித்து காணப்பிக்கப்பட்டது. | 2017 ஆம் ஆண்டின் போது கட்டளையிடப்பட்ட போதிலும் 2019.12.31 ஆம் திகதி வரையிலும் அந்த பொருட்கள் தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு கிடைத்திருக்கவில்லை. கணக்கு வைத்தலில் ஏற்பட்ட தவறினை எதிர்வரும் வருடங்களில் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பெறுமானத் தேய்வின் தவறான ஒதுக்கங்களை பிற்கால சீராக்கல் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டும். |
| (ஏ) | வழங்கப்படாத ரூபா 337,796 ஆன தொழில் ஆரம்பிப்பு முற்பணத்தின் ஒப்பந்தங்கள் கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டமையால் ஒப்பந்த கடன்கொடுத்தோர் முற்பண மீதி அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்படாத முற்பணங்கள் முற்பணங்களாக இணங்காணக் கூடாது. |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 10,379,509 ஆன கடன்பட்டோர் மீதிகள் சான்றுபடுத்துவதற்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துமாறு அனைத்து கடன்பட்டோரிடமும் எழுத்து மூலம் அறிவித்து அனுப்பட்ட போதிலும் அவர்களால் அந்த மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர் மீதி சான்றுபடுத்தல்கள் கணக்காய்விற்கு பெற்றுக்கொள்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரபட்டவாறு காணப்படும் ரூபா 34,971,843 ஆன பெறவேண்டிய மீதி கணக்கீட்டு வலு ஒன்றான பதில் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதனை சான்றுபடுத்துவதற்கு போதுமான சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவு வைத்தலின் வலு ஒன்றின் காரணமாக முன் கொண்டு வரப்பட்டுள்ள இந்த பெறவேண்டிய மீதி எதிர்வரும் வருடங்களில் தன்னியக்க நிதி அளவின் தென்னங்கன்று நாற்று மேடை அழகின் மூலம் உழைக்கப்பட்ட வருமானத்திற்கு எதிராக பதிவழிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பது. | குறித்த கணக்கீட்டு வலுவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரு கடன்பட்டோர் தனியார் கம்பனிகளிலிருந்து அறவிடுவதற்காக வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள முறையே 2,631,003 மற்றும் ரூபா 1,176,375 ஆன தொகையும் 2013 ஆம் ஆண்டு முதல் தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சிலிருந்து சபைக்கு பெற வேண்டிய ரூபா 6,573,572 ஆன தொகையையும் அறவிடுவதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிடுவதற்குரிய பணத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் உள்ளக பிரிவுகளிடையே அறவிடப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதி வருடாந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க முடியாத போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பிரதேச அலுவலகங்களிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 498,524 தொகை பெற வேண்டிய கணக்குகளாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக பிரிவுகளுக்கிடையே அறவிடப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படக் கூடாது |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நிதிப்பிரமாணம் 137 | ரூபா 11,263,000 பெறுமதியான 16 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | நிதி அதிகாரம் மற்றும் அதிகார எல்லையின் கீழ் பட்டியலுடன் கோவையின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. கொடுப்பனவு உறுதிச்சீட்டின் அங்கீகாரம் இல்லாது இருந்தமைக்கு தாமத வலுவினை தவிர்க்குமாறு நிதிப்பிரிவின் அனைத்து உத்தியோத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 137 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப்பெறுபேறு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 141,088,348 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 14,885,097 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 126,203,251 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. சபையின் மீளாய்வாண்டிற்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செலவினம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக ரூபா 232,873,296 இனால் குறைவடைந்தமை செயற்பாடு பெறுபேறுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 விகித பகுப்பாய்வு

நடைமுறை விகிதம் கடந்த வருடம் முதல் மிளாய்வாண்டு வரையிலும் 1:2.50 முதல் 1:2.47 வரை குறைவடைந்துள்ளதுடன் விரைவு விகிதம் 1:0.59 முதல் 1:0.66 வரை அதிகரித்திருந்தது. கடந்த வருடம் முதல் பங்கிலாபம் 1.3 சதவீதமான பங்கிலாபம் 14.1 வரை மீளாய்வாண்டின் போது அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட செலவினம் கடந்த வருடத்திற்கு ஒப்பாக குறைவைடைந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமைபட்டியலின் தெங்கு பயிர் செய்கையாளர்களுக்கு அறிவு மற்றும் தகவல் வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், நோய்கள்/கிருமிகள் மூலம் ஏற்படும் நட்டத்தினை இல்லாது ஒழிப்பதற்காக அறிவுரை வழங்குதல், நோய் மற்றும் கிருமித்தாக்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அவசியமான விவசாய இரசாயன பொருட்கள், ஒட்டுண்ணிகள் , மாற்று நுண்ணுயிர்கள் ஆகியவற்றை வழங்குதல், மற்றும் அவற்றை ஒருங்கிணைத்தல், தொகுதிகளின் விவசாய சேவை மற்றும் தெங்கு பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் தொடர்பில் முழுமையான தரவு கட்டமைப்பொன்றினை பேணிச்செல்லல் மற்றும் தரவுகளை நாளதுவரையாக்குதல் ஆகியன இடம் பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களால் தெங்கு மைய்டா தாக்கம் தொடர்பில் தரவுகளை பேணுதல் மற்றும் அவை இற்றைப்படுத்தப்பட்டிராததுடன் அது தொடர்பில் கண்காணிப்பு உத்தியோகத்தரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மைட்டா சேதம் தொடர்பில் தரவுகளை சேகரித்தல், மற்றும் நாளது வரையாக்குதல் மற்றும் உரிய அறிவுரைகள் 2020.01.22 ஆம் திகதிய மைட்டா சேத முகாமைத்துவ செயற்திட்டம் - 2020 ஆம் இலக்க சுற்றிறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கலால் குறித்த தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. | தெங்கு மைட்டா சேதம் தொடர்பில் சரியான தரவு கட்டமைப்பொன்றினை பேண வேண்டியதுடன் அந்த தரவுகளை நாளதுவரையாக்க வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த சபையின் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக மேழும் ஒரு பகுதியை நிர்மாணிப்பதற்கு உரிய நிறுவனங்களிடம் இருந்து அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காது ஒப்பந்ததாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதன் காரணமாக சபையினால் இந்த | ஒப்பந்ததாரரால் தமது பணிகள் புறக்கணிக்கப்படல் மற்றும் செயலாற்றல் பிணையினை நீடிப்பதற்கு தவறியமையால் நிர்மாண மதியுரையாளரிடம் பரிந்துரையுடன் செயலாற்றல் பிணை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த நிறுவனத்தினால் முன் புற | நிர்மாண பணிகள் கைவிடப்பட்டமைக்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்களுக்காக ரூபா 14,388,275 ஆன தொகை செலவிடப்பட்டுள்ள போது ஒப்பந்ததாரர்களால் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படாது ஒப்பந்தம் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளதுடன் உரிய திருத்தங்களை மேற்கொண்டு ஒப்பந்தத்தினை நிறைவு செய்வதற்கு சபை தவறியிருந்தது. | பகுதி நிறைவு செய்யப்பட்டது எனவும் அதன் போது சபைக்கு நிதிரீதியான நட்டமொன்று ஏற்பட்டால் ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து அந்த நட்டத்தை சபைக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உறுதியளிக்கப்பட்டது. இது தொடர்பில் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திற்கு கிடைக்கும் அறிவுரைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | தெங்கு பயிர்ச்செய்கையின் முகாமைத்துவ நடைமுறையை காண்பிப்பதற்கு நிறுவப்பட்ட மாதிரி தெங்கு தோட்டம் தொடர்பில் ஒவ்வொரு மாதிரியினதும் செயல் முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையொன்று 2 வாரங்களுக்கு ஒரு தடவை தலைமை அலுவலகத்தில் திட்டமிடல் பிரிவிற்கு அறிக்கையிட வேண்டிய போதிலும் அவ்வாறான செயல் முன்னேற்ற மீளாய்வொன்று இடம் பெற்றிருக்கவில்லை. மேலும், அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் போது இது வரையிலும் இந்த செயற்திட்டம் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மாதிரி தெங்கு தோட்டங்களின் செயல் முன்னேற்றத்தின் கண்காணிப்பிற்காக தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பண்ணை திட்டமிடல் உத்தியோகத்தர்கள் காணிகளை தொடர்ச்சியாக பரிசோதித்து சம்பவக் குறிப்பு இட்டுள்ளனர். இது இந்த செயற்திட்டத்தின் தகவல்கள் மற்றும் செயல் முன்னேற்றம் குரு வீடியோ நாடாவின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒவ்வொரு மாதிரிகள் தொடர்பிலும் சரியான செயல் முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு முறையான கண்காணிப்பின் கீழ் செயற்திட்டத்தின் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | கொடுப்பனவுகள் தொடர்பில் உள்ளக கட்டுப்பாடு நலிவடைந்தமையும், காசோலைகளினை மாற்றுதல் மற்றும் பதிவழித்தல் தொடர்பில் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்படாது சான்றுபடுத்தும் உத்தியோகத்தர்களால் அந்த மாற்றங்கள், பதிவழித்தல்கள் சான்றுபடுத்தப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் போது சபையில் இடம் பெற்றிருந்த ரூபா 595,060 தொகையான காசோலை மோசடிக்கு உரிய நட்டத்தினை அறவிட்டு அந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் | கணக்காணிப்பு உத்தியோகத்தர்களின் கண்காணிப்பு நடைமுறைக்கு புறம்பாக குறித்த பெண் உத்தியோகத்தரால் மோசடியில் ஈடுபட்டுள்ளமையால் உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காது காசோலைகளை வழங்குதல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளும் நடைமுறை அறிவுரை கோவையொன்று நாளது வரையாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுபாட்டு முறைமை தாபிக்கப்பட வேண்டும். நிலவிய குறைபாடுகள் தொடர்பில் பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கு எதிராக எது வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | சபையினால் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டின் போது கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 372,537 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பாட புத்தகங்களுக்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிலிருந்து பெற வேண்டிய ரூபா 4,596,475 ஆன மீதியொன்று 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் இதற்காக ஐயக்கடன் ஒதுக்கீடு அல்லது வெளிப்படுத்தலொன்று நிதிக்கூற்றுக்களினுல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெங்கு பயிர்ச்செய்கை சபையின் மூலம் மாற்று மைட்டா ஆய்வுகூடங்கள் 11 நடாத்தப்பட்டிருந்த போதிலும் மாற்று மைட்டாக்களுக்கான நாடாளவிய உற்பத்தி ஆய்வுகூடமொன்று இல்லாதிருந்தமை, மைட்டா பக்கட்டுக்களை கொண்டு சென்று களஞ்சியப்படுத்தல் காணப்படும் சிக்கல்கள் காரணமாக தெங்கு தேவையான வகையில் மைட்டா பக்கட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மாற்று மைட்டாக்களை பயிர்ச்சொய்கையாளருக்கு கொண்டு செல்லும் நடைமுறையொன்று மற்றும் இல்லாத பிரதேசங்களில் வழிசீராக்கியுடனான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விசேட செயற்திட்டத்திற்கு பொது திறைசேரியினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. போக்குவரத்து பணிகளுக்காக அனைத்து மைட்டா பக்கட்டுக்களும் ஒவ்வொன்றும் ரூபா 3.00 படி நிதி வழங்குதலும் | தெங்கு பயிர்ச்செய்கையாளரின் கோரிக்கைக்கு பொருந்தும் வகையில் மைட்டா பக்கட்டுக்களை நாடு முழுவதும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பக்கட்டுக்களை கொண்டு செல்வதற்கு, களஞ்சியப்படுத்துதல் மற்றும் நீண்ட காலம் வைத்திருப்பதில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போக்குவரத்திற்கு பிரதேச அலுவலகத்தின் வாகனங்களை பயன்படுத்துவதற்கு அல்லது அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் வாடகை அடிப்படையில் வாகனமொன்றை ஈடுபடுத்துவதற்கும் பிரதேச முகாமையாளர் ஒருவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான மட்டக்களமப்பு, வெலிபிட்டிய, கேகாலை மற்றும் அம்பாறை ஆகிய ஆய்வு கூடங்களின் ஊழியர்களின் கவனயீனம் மற்றும் ஆய்வு கூடங்களில் நிலவும் பாதகமான தன்மை, தேவையான உயிரியல் உபகரணங்கள் இல்லாதிருந்தமை காரணங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு கூடம் 2018 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டின் சேதத்திற்கு உள்ளாகியிருந்ததுடன் வெலிபிட்டிய மைட்டா ஆய்வு கூடம் தற்போது மூடப்பட்டுள்ளது. | தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் 11 ஆய்வு கூடங்களினுள் மாற்று மைட்டாக்களை உற்பத்தி செய்யும் பயிற்றுவிக்கப்பட்ட புதிய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த நடைமுறையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு அளவிலான தாக்கங்கள் ஏற்படக் கூடும். | சபைக்குரிய ஆய்வு கூடங்களை உரிய நியமனத்தின் கீழ் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் தெங்கு பயிர்ச் செய்கை சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட பலப்படுத்தல் கிராமிய படையணி செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 50.7 மில்லியனில் ரூபா 38.45 மில்லியன் பயிற்றுவித்தல் பணிகளுக்காகவும் ரூபா 12.25 மில்லியன் பயிற்சிகளுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது முறையே 76 சதவீதம் முதல் 24 சதவீதத்திற்கு உட்பட்டதாகும். அவ்வாறான போதிலும் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 24.55 மில்லியன் நிதியேற்பாட்டில் ரூபா 5.12 மில்லியன் பயிற்சி நடவடிக்கைகளுக்காகாவும் ரூபா 19.02 மில்லியன் கள | 03 வருடங்களுக்காக இந்த செயற்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 50.7 மில்லியன் தொகையில் 2019 ஆம் ஆண்டின் இறுதி அளவில் வழங்கப்பட்டுள்ள 40 சதவீதமான ரூபா 24.557 மில்லியன் இயந்திர உபகரணங்களின் பயன்பாடு தொடர்பில் ஊழியர்களுக்கு சிறந்த புரிந்துணர்வை வழங்குவதற்காக வழங்கப்பட்டுள்ள இலத்திரணியல் உபகரணங்காலாக டப் இயந்திரங்களை கொள்வனவு செய்ய பயன்படுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் அதன் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு | |

| | | |
|---|---|---|
| உபகரணங்கள் மற்றும் டப்லெட் கணனிகளை கொள்வனவு செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அது முறையே 22 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்ட முன்மொழிவிலிருந்து விலகி நிதி பயன்படுத்தப்பட்டிருந்தமையால் தெங்கு கைத்தொழிலுக்கு பயிற்றுவிக்கப்பட்ட தொழிற் படையினை ஒன்றினை தாபிக்கும் பிரதான நோக்கினை அடைந்து கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஈடுபடுத்தப்பட வேண்டும். | |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ உதவியாளர் III தரத்தின் பதவிக்கு உரிய 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்ததுடன் நேர் முகப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படுதல் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கல் நடைமுறைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட 13 பேரில் 5 பேர் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு உரிய நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு உரிய திகதியில் தோற்றியிராத விண்ணப்பதாரிகள் என தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | தெரிவு செய்யப்பட்ட 5 விண்ணப்பதாரிகளின் கையொப்பங்கள் பொது கையொப்ப பதிவேட்டில் இல்லாதிருந்த போதிலும் நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிப் பதிவேட்டில் உரிய முறையில் புள்ளி உள்ளடங்கியுள்ளமையால் இந்த விண்ணப்பதாரர்கள் உரிய முறையில் நேர்முக பரீட்சைக்கு பங்குபற்றியுள்ளனர். வெற்றிடங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும் வரை முன் ஆயத்தமாக தலைவரின் அறிவுரைக்கமைய அந்த பதவிக்காக பத்திரிகை அறிவித்தல் மற்றும் பொதுவான அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் 2018/03 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மீறப்படவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்க வெளிப்படைத்தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் III தரத்தின் | இந்த சபையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தெங்கு அபிவிருத்தி | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் |

பதவிகளுக்குரிய 30 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 27 உத்தியோகத்தர்களில் 20 பேர் ஆட்சேர்க்கப்பட்டமைக்கு உரிய புள்ளி வழங்கல் நடைமுறைக்கு முரணாக கூடுதலான புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த ஆட்சேர்ப்பு வெளிப்படைத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் இடம் பெற்றுள்ளமையை கணக்காய்வின் போது அவதானிக்க முடியாதிருந்தது.

உத்தியோகத்தர்கள் 27 பேரும் நேர்முக பரீட்சை சபைகள் மூன்றில் பங்குபற்றியுள்ளமை நேர்முக பரீட்சை புள்ளி பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. நேர்முக பரீட்சைகளுக்காக விண்ணப்பதாரிகள் கொண்டு வரும் சான்றிதழ்கள் மற்றும் அந்த சந்தர்ப்பத்தில் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவற்றிற்கமைய நேர்முக பரீட்சை சபையினால் புள்ளி வழங்கப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்டுள்ள புள்ளிகள் குறித்த புள்ளி வழங்கல் பத்திரத்திற்கு இணங்க முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கல் நடைமுறைக்கு இணங்க வெளிப்படைத் தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.